**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலன் – 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தொழிற் பயிற்சியுடன் கூடிய 10 இல்லங்களும் மற்றும் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கென தனியாக தொழிற் பயிற்சியுடன் கூடிய 10 இல்லங்களும் 2011–2012 ஆம் நிதியாண்டில் டிசம்பர் 2011 முதல் புதியதாக தொடங்குதல்– ரூ.76,72,000/–நிதி ஒப்பளிப்பு செய்தல்–ஆணை வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(நிலை) எண்.70 நாள்: 09–12–2011

கார்த்திகை 23, திருவள்ளுவர் ஆண்டு 2042

படிக்க:

1. அரசாணை(நிலை) எண்.70, மாற்றுத் திறனாளிகள் நல (மா.தி.ந.ந2.1)த் துறை, நாள் 6.9.2010.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் ந.க.எண்.3674/மா.தி.ந.2.1/2011, நாள் 22.7.2011.

------

**<u>ஆணை:</u>**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின்படி 2010–2011ம் நிதியாண்டிற்கு, 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான ஏழு இல்லங்களுக்கென ரூ.71,76,400/– நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் தமது கடிதத்தில், 11.7.2011 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் திட்டங்களை ஆய்வு செய்த போது 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்காக 10 இல்லங்களும், பெண்களுக்காக 10 இல்லங்களும் தொடங்கப்பட வேண்டும் என அறிவுரை வழங்கியதால் அவ்வறிப்பினை செயல்படுத்தும் வண்ணம் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய ஆண்கள் மற்றும் பெண்களுக்கென தலா 10 இல்லங்கள் வீதம் மொத்தம் 20 இல்லங்கள் புதியதாக தொடங்க கூடுதலாக ரூ.2.00 கோடி திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் நிதி ஒதுக்கீடு வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

3. இதனை தொடர்ந்து மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மானியக் கோரிக்கை எண்.52–ற்கு 06.09.2011 அன்று சட்டமன்றப் பேரவையில் பதிலளிக்கும் போது மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்களால் ஏனைய அறிவிப்புகளுடன் பின்வரும் அறிவிப்பும் செய்யப்பட்டது.

“மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்புப் பள்ளிகளிலிருந்து வெளிவரும், 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோரை பராமரிப்பதற்கும், பெற்றோர் / பாதுகாவலருக்கு முறையான வழிகாட்டுதல் வழங்குவதற்கும், தொழிற்பயிற்சி வசதிகளுடன் இல்லங்கள் அமைப்பது மிக அவசியமாகிறது. 14 வயதிற்கு மேற்பட்ட, மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கான தொழிற்பயிற்சியுடன் கூடிய இல்லங்கள் சென்னை, கடலூர், இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவள்ளூர், ஈரோடு, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 10 மாவட்டங்களில் ஒரு கோடி ரூபாய் செலவில் துவங்கப்படும். இந்த இல்லங்களில் உணவு, உடை, உறைவிடத்துடன் தோட்டக்கலை, மெழுகுவத்தி தயாரித்தல் ஆகியவற்றில் பயிற்சியும் வழங்கப்படும்.

மேலும், சிறப்புப் பள்ளிகளில் பயின்ற 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய மகளிருக்கு பாதுகாப்பும், பயிற்சியும் அளிக்கும் வகையில் சென்னை, திண்டுக்கல், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, திருச்சி, திருநெல்வேலி, தேனி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் மதுரை ஆகிய 10 மாவட்டங்களில் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய மகளிருக்கான இல்லங்கள் ஒரு கோடி ரூபாய் செலவில் அமைக்கப்படும். இந்த இல்லங்களில் உணவு, உடை மற்றும் உறைவிடத்துடன், தோட்டக்கலை, மெழுகு பொருட்கள் தயாரித்தல் மற்றும் பேக்கரி பொருட்கள் தயாரித்தல் ஆகியவற்றில் பயிற்சியும் அளிக்கப்படும்.’’

4. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்த அரசு அதனை ஏற்று, 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய ஆண்களுக்கு தொழிற்பயிற்சியுடன் கூடிய 10 இல்லங்களை சென்னை, கடலூர், இராமநாதபுரம், சேலம், சிவகங்கை, தஞ்சாவூர், திருவள்ளூர், ஈரோடு, தூத்துக்குடி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களிலும் மற்றும் சிறப்பு பள்ளிகளில் பயின்ற 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றிய பெண்களுக்கு தொழிற் பயிற்சியுடன் கூடிய 10 இல்லங்களை சென்னை, திண்டுக்கல், கோயம்புத்தூர், கிருஷ்ணகிரி, திருச்சி, திருநெல்வேலி, தேனி, திருவண்ணாமலை, காஞ்சிபுரம் மற்றும் மதுரை ஆகிய மாவட்டங்களிலும் 2011, டிசம்பர் மாதம் முதல் துவங்க அனுமதியும், இவ்வாணையின் இணைப்பில் கண்டுள்ளவாறு ரூ.76,72,000/– க்கு (ரூபாய் எழுபத்து ஆறு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு வழங்கி ஆணையிடுகிறது.

5. மேலே 4ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

“2235–சமூகப் பாதுகாப்பும் நலனும்–02–சமூக நலன்–101–மாற்றுத் திறனாளிகள் நலன் – பதினொன்றாம் ஐந்து ஆண்டுத் திட்டப் பணிகள் II மாநிலத் திட்டம்–MG– மனவளர்ச்சி குன்றியோருக்கான சிறப்பு நிலையங்களுக்கான புகழ்வாய்ந்த அரசு சாரா அமைப்புகளுக்கு நிதியுதவி –09. உதவித் தொகை–01. நடப்புச் செலவுக்கான உதவித் தொகை”.
(த.தொ.கு 2235–02–101–MG–0914)

6. (i) மனவளர்ச்சி குன்றியோருக்கான இல்லங்களை மாவட்ட ஆட்சியரால் பரிந்துரைச் செய்யப்படும் தகுதி வாய்ந்த தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்.

(ii) தன்னார்வ தொண்டு நிறுவனங்களை தேர்ந்தெடுத்தல் மற்றும் நீக்கும் அதிகாரமும், புதிய இல்லங்கள் தொடங்குவதற்கான மாவட்டங்களை தேர்ந்தெடுத்தல் மற்றும் நீக்கவும் அரசின் ஒப்புதலைப் பெற்று செயல்படுமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(iii) மேலே பத்தி 4– ல் ஒப்பளிப்பு செய்யப்பட்ட தொகையை பெற்று உரிய தன்னார்வ தொண்டு நிறுவனங்களுக்கு வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது.

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு “புது துணைப் பணி” குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும் சட்டமன்றப் பேரவையின் ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து மேற்கொள்ளப்பட வேண்டும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொ–I) துறையில் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து மேற்படி செலவினத்திற்கு முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை இவ்வரசாணையின் நகலுடன் நிதி (வ.வெ.பொ–I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும் இச்செலவினத்தை 2011–12 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கான கருத்துருவை உரிய நேரத்தில் நிதித் துறைக்கு அனுப்பி வைக்குமாறும் மாற்றுத் திறனாளிகள் நல ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். நிதி(சந)/63716/2011, நாள் 09.12.2011–ன் இசைவின்படியும் மற்றும் கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1048 (ஆயிரத்து நாற்பத்து எட்டு)வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–5/9/35.
தலைமைக் கணக்காயர், சென்னை–18/35
தலைமைக் கணக்காயர், சென்னை– 18/35 (பெயரில்)

<u>நகல்:-</u>
நிதி (சந/ வ.செ.பொ.I/வ.செ.பொ.II) துறை, சென்னை–9.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
செயலாளர் (மா.திந. துறை) அவர்களின் தனிச் செயலாளர், சென்னை–9.
மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, அனைத்துப் பிரிவுகள்.
இருப்பு கோப்பு/உதிரி

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.

<u>இணைப்பு</u>

(அரசாணை(நிலை) எண்.70, மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2..1)த் துறை, நாள் 09–12–2011)

**டிசம்பர் 2011 முதல் 14 வயதிற்கு மேற்பட்ட மனவளர்ச்சி குன்றியோருக்கான தொழிற்பயிற்சியுடன் கூடிய ஆண்களுக்கான 10 இல்லங்கள் மற்றும் பெண்களுக்கான10 இல்லங்கள் அமைத்தல்**

| | |
|---|---|
| வயது வரம்பு | 14 வயது மற்றும் அதற்கு மேல் |
| இனம் | ஆண்கள் மற்றும் பெண்கள் |

<u>தொடர் செலவினம் (4 மாதங்கள்)</u>

தொகை ரூ.

| | | |
|---|---|---|
| 1. | சமூக பணியாளர் / மேலாளர் / விடுதிக் காப்பாளர் / முதுநிலை பயிற்சியாளள் மதிப்பூதியம்<br>ரூ.6,000/– x 1 நபர் x 4மாதங்கள் | 24,000/– |
| 2. | காப்பாளர்<br>ரூ.5,000/– x 1 நபர் x 4 மாதங்கள் | 20,000/– |
| 3. | சமையலர்<br>ரூ.3,000/– x 1 நபர் x 4மாதங்கள் | 12,000/– |
| 4. | உதவி சமையலர்<br>ரூ.2,000/– x 1 நபர் x 4மாதங்கள் | 8,000/– |
| 5. | இரவுக் காவலர்<br>ரூ.4,000/– x 1 நபர் x 4மாதங்கள் | 16,000/– |
| 6. | தொழிற் பயிற்றுநர்கள்<br>ரூ.6,000/– x 2 நபர்கள் x 4 மாதங்கள் | 48,000/– |
| 7. | துப்புரவு பணியாளர்<br>ரூ.2,000/– x 1 நபர் x 4மாதங்கள் | 8,000/– |
| 8. | உணவூட்டுச் செலவினம்<br>ரூ.450/– ஒரு மாதத்திற்கு x 40 நபர்கள் x 4மாதங்கள் | 72,000/– |
| 9. | உடைகள் (வருடத்திற்கு 2 செட்)<br>ரூ.500/– x 40 நபர்கள் x 2 செட் | 40,000/– |
| 10. | வாடகை (ரூ.10,000/–)/ கட்டட பராமரிப்பு (சொந்த கட்டடம் எனில்) மற்றும் மின் கட்டணம்(ரூ.3,000/–)<br>ரூ.13,000/– x 4 மாதங்கள் | 52,000/– |
| 11. | தொலைபேசி மாதாந்திர கட்டணம்<br>ரூ.1,000/– x 4மாதங்கள் | 4,000/– |
| 12. | மருந்துகள்<br>ரூ.1,500/– x 4 மாதங்கள் | 6,000/– |
| 13. | பாய்கள் மற்றும் தலையணைகள்<br>ரூ.200 x 40 | 8,000/– |

| | | |
|---|---|---|
| 14. | சோப்பு மற்றும் இதர பொருட்கள்<br>ரூ.50/– x 40 நபர்கள் | 2,000/– |
| 15. | சமையல் எரிவாயு ரூ.900/– x 4 மாதங்கள் | 3,600/– |
| | **மொத்தம்** | **3,23,600/–** |

<u>தொடரா செலவினம்</u>

தொகை ரூ.

| | | |
|---|---|---|
| 1. | சமையல் எரி வாயு இணைப்பு<br>(ரூ.10,000 /– x 1 மையம்) | 10,000/– |
| 2. | தொழிற்பயிற்சிக்கான தளவாடங்கள்மற்றும் இதர பொருட்கள் | 50,000/– |
| | மொத்தம் | **60,000/–** |

**சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | **தொடர் செலவினம்** | **ரூ. 3,23,600/–** |
| 2. | **தொடரா செலவினம்** | **ரூ. 60,000/–** |
| | **மொத்தம்** | **ரூ.3,83,600/–** |

| | |
|---|---|
| ஒரு இல்லங்களுக்கான செலவினம் 2011 டிசம்பர் முதல் 2012 மார்ச் வரை (4 மாதங்களுக்கு) | ரூ.3,83,600/– |
| 20 இல்லங்களுக்கான செலவினம்<br>(4 மாதங்களுக்கு ) (ரூ.3,83,600/– x 20) | ரூ.76,72,000/– |

(ரூபாய் எழுபத்து ஆறு இலட்சத்து எழுபத்து இரண்டாயிரம் மட்டும்)

கண்ணகி பாக்கியநாதன்,
அரசுச் செயலாளர்.

// உண்மை நகல்//

பிரிவு அலுவலர்.